இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 03
இறுதிப் பரீட்சை – 2008
**LWU 1201 –** அரசியலமைப்புச் சட்டம்.
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 24.03.2008 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

**ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

**தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. "பரந்த அரசியல் கொள்கையாக இருப்பதனால் சட்டவாட்சியின் மீது சாதாரண மற்றும் சுருங்கிய தெளிவான கூற்றினை உருவாக்குவது என்பது முடியாத காரியமாகும். சமூக அபிவிருத்தியை மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகளின் மாற்றத்தினை போன்று மாற்றமடையும் தேவைகளை சந்திக்க பெறப்பட்ட சட்டத்தின் பெறுமதியை ஏற்றுக்கொள்ள சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள் மற்றும் நிருவாகத்தினர் தயாராக வேண்டும்".

    Sir L .Scarman, English law- *The New Dimension* cited in *Constitutional and Admnistrative Law* - E.C.S.Wade and A.W.Bradley at p.102-footnote 33.

    சட்டவாட்சி எண்ணக்கருவின் பின்னணியில் மேற்கண்ட கூற்றினை நுணுக்கமாக ஆராய்க.

02 "நீதித்துறைச் சுதந்திரம் சம்பந்தப்பட்ட விளக்கமான பிரிவுகளை அரசியலமைப்பு கொண்டிருந்தால் நாட்டு மக்கள் அனைவரினதும் சமத்துவத்தை சிறந்தளவில் பாதுகாத்து மேம்படுத்த முடியும்"

    மேற்தரப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

03. 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்புடன் 1978ம் ஆண்டிலன் அரசியலமைப்பின் கீழான ஜனாதிபதியின் பதவி நிலையின் பண்புகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

04. (a) 1802ல் இலிருந்து சோல்பறி அரசியலமைப்பின் உருவாக்கம் வரையான இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றினை படிப்படியாக விபரிக்குக.

    (b) இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் முக்கிய பண்புகளை விபரிக்குக.

05. அரசாங்கத்தின் மூன்று துறைகளுக்கிடையிலான செயற்பாட்டு வலு வேறாக்கத்திற்கு அமைய வலுவேறாக்கல் கோட்பாட்டின் கருவரிப்பை(Conceptual erosion) விபரிக்குக.

06. (அ) "1978ம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் ஆட்சி செலுத்தும் பண்புகளை பாராளுமன்ற சட்டவாக்க மீயுயர்க்தன்மை எனும் கருத்தேற்பு முடிவுறுத்தியுள்ளது"

இலங்கையின் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பு மற்றும் 1972ம் ஆண்டின் அரசியலமைப்பு ஆகியவற்றின் பிரிவுகளின் அடிப்படையில் மேற்தரப்பட்ட கூற்றினை விமர்சித்து பரீட்சிக்குக.

(ஆ) "பிரித்தானிய அரசியலமைப்பில் பிரதான பண்பாக பாராளுமன்ற மீயுயர்தன்மை எனும் கருத்தேற்பின் திடீர் தோற்றம் அரசனின் அதிகாரங்களைப் படிப்படியாக துண்டாடுவதற்கு வழிவகுத்தது".

'பிரித்தானிய பாராளுமன்றத்தின் சட்டவாக்க மீயுயர் தன்மை' எனும் பின்னணியில் இக்கூற்றைப் பரீட்சிக்குக.

07. (அ) 1948இல் இருந்து 1972 வரையான காலப்பகுதியில் அரசியலமைப்பாக்க திருத்தத்தின் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் ஒப்பிடும் போது 1972ஆம் ஆண்டு மற்றும் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்புக்கள் அரசிலயலமைப்பாக்கத் திருத்தம் தொடர்பில் விரிவான பிரிவுகளைத் தந்துள்ளன.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களை தருக.

(ஆ) இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் மக்கள் தீர்ப்பினை எச்சந்தர்ப்பங்களில் பிரயோகிக்க முடியும் என்பதனை சுருக்கமாக விபரிக்குக.

08. கீழ் வருவவற்றுள் இரண்டினைப்பற்றி குறிப்பு வரைக.

(அ) மக்கலம் சீர்திருத்தம்

(ஆ) குறைகோள் அதிகாரியின் (Ombudsman) பதவியில் இருந்து எதிர்பார்க்கப்படும் பரிகாரங்கள்.

(இ) பொதுமக்கள் அக்கரை வழக்கு.

(ஈ) தன்னாண்மைக் கோட்பாடு.

(பதிப்புரிமையுடையது)